செ.கு.எண் : 167 நாள் : 02-05-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.5.2012

சென்னை, சைதாப்பேட்டையைச் சேர்ந்த திரு. குமார் என்பவரின் மகன் செல்வன் நவீன் பிரசாத் 30.4.2012 அன்று ராஜீவ்காந்தி சாலையில், இந்திராநகர் ரயில்நிலையம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது, மாநகர அரசு பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்தில் அகால மரணமடைந்த நவீன் பிரசாத்தின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான நவீன் பிரசாத்தின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.